1975 ஏப்ரல் 8]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இராஜாஜி நினைவு மண்டபம் கட்டி முடிந்துவிட்டது. திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் வருவதாக இருந்தது ; இப்போது வர முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். வருவதாக தேதி கொடுத்துவிட்டு வராமல் இருப்பதற்கு ஏதாவது அரசியல் காரணம் உண்டா ? அப்படி ஏதாவது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு விடை இல்லை.
வினா 587.

Mettupalayam–Ooty railway service.

***587** *Q.*—THIRU **R. R. MUNUSAMI**
THIRU **N. KITTAPPA** } : Will the **Hon.** the **Minister for Public Works be pleased to state—**

(*a*) whether the State Government have taken any efforts to secure the restoration of the railway service between Mettupalayam and Ooty ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) ஊட்டி — மேட்டுப்பாளையத்திற்கிடையே செல்லும் 35/36 எண்கள் கொண்ட ரயில் வண்டிகள் 15—7—1974 லிருந்து மீண்டும் விடப்படுகின்றன என்று தென்னிந்திய ரெயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த உதகை—மேட்டுப்பாளையம் இரயில் பாதையை அடிக்கடி நிறுத்திவிடுகிறார்கள். உதகமண்டலம் ஒரு முக்கியமான சுற்றுலா கேந்திரத்திற்குட்பட்டிருப்பதால், தமிழக அரசே அந்த ரயில் பாதையை ஏற்று நடத்த, மத்திய அரசிடம் கோரி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலக்கரி பற்றுக்குறை காரணமாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு பூராவிலும் நிறுத்தப்பட்ட இரயில் பாதைகளில் இதுவும் ஒன்று. நம்முடைய வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இரயில் விடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்வதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்குச் செல்ல கரி எஞ்சின் போட்டிருப்பதால் மிகவும் மெதுவாக செல்லுகிறது. அது பிரயாணிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் டீசல் எஞ்சின் போட மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டதோ கேட்டீர்கள், எலெக்டிரிக் எஞ்சின் போட வேண்டுமென்று கேட்கக்கூடாதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேட்கலாம். மத்திய அரசுக்கு இதுபற்றிய தகவல் தரப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, ஊட்டி இரயில் வேகமாகச் சென்றால் எப்போதும் ஆபத்துதான். இப்போது இருக்கிற இந்த நிலையில் கண்கொள்ளா காட்சியைக் காணமுடிகிறது. ஆகவே, இதே நிலை நீடித்திருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் சொல்லுவது போல மலைப்பாதையில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. இருந்தாலும் ரொம்பவும் மெதுவாகப் போகிறதா என்று தெரியவில்லை; டீசல் எஞ்சின் போடுவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

Issue of ration cards.

*588 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that new ration cards have not yet been supplied to a number of house holders in Madras City ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken to speed up the work ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) அண்டு (உ) சென்னையில் புதிய குடும்பக் கார்டுகள் வழங்கும் பணி 5—3—75 முதல் தொடங்கப்பட்டிருக்கிறது ; விரைவில் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணி முடிந்தவுடன் இப்போது கார்டு இல்லாதவர்களுக்கும் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

*589 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that ration card holders in the City of Madras and Coimbatore area are permitted to draw their quota of rice for a month in bulk; and

(*b*) if so, the reasons for the same ?